DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.** 208/2020

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.காளீஸ்வரி **Dw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of January 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நகர அமைப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் செங்கோட்டை நகரம் காதர்ஒலி தரகனார் தெரு, வார்டு எண். 22, 2 வதுதெரு, பழைய கதவு எண். 70, புதிய கதவு எண். 138 என்ற கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி உத்தரவு, வீட்டு வரி ரசீது ஆகிய விவரங்களை தாக்கல் செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் நகராட்சி பதிவேடுகளை ஆய்வு செய்கையில் மேற்படி முகவரியில் 70/138 என்ற கதவு எண் கொண்ட கட்டிடம் இல்லை என கண்டறியப்பட்டு அதன் படி செங்கோட்டை நகராட்சி ஆணையாளரால் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை Ex.X1 ஆகும்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

காதர்ஒலிதரகனார் தெருவுக்கு அருகில் தான் பம்ப்ஹவுஸ் தெரு உள்ளது என்றால் சரிதான். பம்ப்ஹவுஸ் தெருவில் மேற்படி 70/138 என்ற கதவு எண் கொண்ட கட்டிடம் உள்ளதா என்பது எங்கள் அலுவலக பதிவேடுகளை ஆய்வு செய்தால் தெரியவரும். வீட்டுத் தீர்வை ரசீதின் அடிப்படையில் ஆய்வு செய்தால் அந்த கட்டிடம் எங்கே உள்ளது, அதன் உரிமையாளர் யார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அலுவலக பதிவேடுகளை ஆய்வு செய்து மேற்படி விவரங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான்.

**(சாட்சியின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi